සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
සමාජ සවිබලගැන්වීම්, සුබසාධන හා කන්ද උඩරට උරුමය පිළිබඳ අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT, WELFARE AND KANDYAN HERITAGE

| | | |
|---|---|---|
| මගේ අංකය DSD/HO/05/MF/02 | ඔබේ අංකය | දිනය 2018.06.06 |
| எனது இல | உமது இல .............................................. | திகதி .............................................. |
| My No | Your No | Date |

2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்தின்
33(9) சரத்துக்கமைய சமுர்த்தி சமுதாய அடிப்படை முகாமைத்துவ சபை அனுமதியின் பிரகாரம் வெளியிடப்படும் கட்டளை- 2018 இலக்கம் 07

**<u>சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களில் உள்ள நிதியத்தினை அரச வங்கிகளில் முதலீடு செய்தலும் மற்றும் அது தொடர்பான கட்டளைகளும்</u>**

01.**அறிமுகம்:-**

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களிடம் உள்ள நிதியத்தினை அரச வங்கிகளில் முதலீடு செய்தல் தொடர்பாக நெறிப்படுத்தல் கையேடு இலக்கம் 02 மற்றும் அதற்கான பிற்சேர்க்கைகள் மூலம் இதுவரை ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. இவ் ஆலோசனைகளில் மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசியமான திருத்தங்களான அனுமதிக்கப்பட்ட வங்கிகளில் முதலீடு செய்யக்கூடிய உயர்ந்தபட்ச தொகையின் வீதாசாரம் தொடர்பாக வங்கி முகாமைத்துவ சபையின் தீர்மான இலக்கம் 2018/39/06 இன் மூலம் வழங்கப்பட்ட கட்டளைகள் இத்தால் வெளியிடப்படுகின்றது.

02. **முதலீடு செய்யக்கூடிய அரச வங்கிகள் மற்றும் முதலீடு செய்யக்கூடிய வீதாசாரமும்**

| அரச வங்கிகள் | உயர்ந்தபட்ச முதலீட்டு வீதாசாரம் (மொத்த முதலீட்டு தொகையில்) |
|---|---|
| இலங்கை வங்கி (BOC) | 25% |
| மக்கள் வங்கி ( PB) | 25% |
| தேசிய சேமிப்பு வங்கி (NSB) | 25% |
| பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB) | 15% |
| வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி (HDFC) | 10% |

03.**முதலீட்டு நிதிய வீதாசாதரம் கணிப்பிடல்:-**

புதிய முதலீடு / முதிர்வடையும் முதலீட்டினை மீள் முதலீடு செய்தல் போன்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அத்தினத்தில் அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு வங்கியிலும் முதலீடு செய்துள்ள நிதியத்தினை மொத்த முதலீட்டுடன் ஒப்பீடு செய்து கணிப்பீடு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

04.**முதிர்வடையாதுள்ள முதலீட்டு நிதி தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்:-**

தற்போது அனுமதியளிக்கப்பட்டுள்ள வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளள நிதி புதிய வீதாசாரத்தினை விட அதிகரித்து காணப்படுமாயின் அம் முதலீடு முதிர்வடையும் போது அத்தொகையினை அவ் வங்கியிலிருந்து மீளப் பெற்று அனுமதிக்கப்பட்ட வீதாசாரத்துக்கு மேற்படாத நிலையில் உள்ள வங்கிகளில் மாத்திரம் முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கவும்.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ (මානව සම්පත්) பணிப்பாளர் ( மனிதவளம்) Director (Human Resource) | අධ්‍යක්ෂ ජනරාල් பணிப்பாளர் தலைமையதிபதி Director General | ප්‍රධාන ගණකාධිකාරී பிரதான கணக்காளர் Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) பணிப்பாளர் (குறு நிதி ) Director ( Micro Finance) | කාර්යාලය அலுவலகம் Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2873799 | 011-2871672/2872202 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2873996 | 011-2889002 | 011-2869742 | 011-2887469 | Hot Line: 011- 2887722 |
| E-mail- | diradmin@samurdhi.gov.lk | dg@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | Hot Line:0112-885582 | Desktop -shani |

05. வட்டி வீதம் தொடர்பாக கூறு விலை கோரும் போது வங்கிச் சங்க நெறிப்படுத்தல் ஆலோசனைக் கையேடு இலக்கம் 02 இன் 12வது பிற்சேர்க்கையின் பந்தி இலக்கம் 02.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளை அவ்வாறே பின்பற்றுமாறும், மேலே குறிப்பிட்டுள்ள கட்டளை இலக்கம் 02 இற்கு உட்பட்ட விதத்தில் கேள்விச் சபைத் தீர்மானங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவும்

06. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி / வங்கிச் சங்கங்களின் நடைமுறைக்கணக்குகளில் இயலுமான வரை குறைந்தளவு மீதியை செயற்படுத்திச் செல்லுமாறும், கடன் வழங்கல் / வைப்புக்களை விடுவித்தலின் பொருட்டு நடைமுறைக்கணக்கில் தற்காலிகமாக பணத்தை தேக்கி வைக்கும் போது அன்நிதியத்திலிருந்து மேலதிக பிரதிபலனை பெற்றுக் கொள்ளும் விதத்தில் குறுங்கால முதலீட்டு வகையான ஏழு நாள் அறிவித்தல் முதலீடுகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும். அதே போல் சமுர்த்தி வங்கிச் சங்கங்களுக்கு முதலீட்டுத் தீர்மானங்களை எடுப்பதற்கு தாமதமாகும் சந்தர்ப்பங்களில் குறுங்கால முதலீடுகளை ஏழு நாள்அறிவித்தல் முதலீட்டில் முதலீடு செய்து கொள்ள முடியும்.(மிகக் குறுகிய காலத்திற்கு) இவ்வாறான ஆலோசனைகள் தங்களுக்கு வழங்குவது வங்கி / வங்கிச் சங்கங்களின் நிதிக் கூற்றின் பிரகாரம் நடைமுறைக் கணக்கில் மிகக் கூடுதலான தொகை நிதி தேக்கி வைக்கப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தமையால் வங்கி முகாமைத்துவ சபை கூடுதல் கவனத்தை செலுத்துமாறு சுட்டி காட்டியிருந்தது.

07. சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர்களினால் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் நிறைவேற்றுச் சபைக்கூட்டத்தில் நிதியங்களின் முதலீடு, வட்டிவீதம் தொடர்பான அறிக்கையினை சமர்ப்பித்து அதற்கான அனுமதியினை பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும். அது தொடர்பான அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

08. நிதியங்களின் முதலீடு தொடர்பாக ஏனைய வழிகாட்டல்களுக்கு ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள நெறிப்படுத்தல் கையேடு இலக்கம் 02 மற்றும் அதற்கான இணைப்புக்கள் தொடர்ந்தும் செயற்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. சுனில் ஜயந்தநவரட்ண
பணிப்பாளர் நாயகம் / வங்கி முகாமைத்துவ சபை தலைவர்
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

Translated By- I. Aliyar